வடபகுதிக்கு அரசுயூரியாவை அனுப்பவேண்டும்

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

லர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 4 இதழ் 69
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17-04-1995

விக்டர் ஐவன் கூறுகிறார்

(கொழும்பு)

பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு விட்டது என்ற போர்வையில் யூரியா போன்ற, மக்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் பொருட்களை அரசாங்கம் தடைசெய்திருப்பது ஒரு அரசியல் ஏமாற்று வித்தையாகும் என்று 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் பி. பி. சி. சிங்கள சேவைக்கு அளித்த அரசியல் கண்ணோட்டத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

★ பொருளாதாரத் தடை நீக்கம்

வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியாகும்

(சொழும்பு)

வடபகுதிக்கான பொருளாதாரத் தடை நீக்கம் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் இன்று வெளியாகுமென அரசு தரப்பில் அறிவிக்கப்படுகிறது.

கடந்த 12ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா புலிகளுக்கு எழுதிய கடிதத்தில் ரோச் பற்றறி திசையறிகருவி, தொலைவிலிருந்து இயக்கும் கருவிகள், இராணுவ சீருடைத்துணிகள் உட்பட 8 பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தார்.

இது பற்றிய வர்த்தமானி அறிவித்தல் இன்று திங்கட்கிழமையே வெளிவருமெனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

★ கிழக்கு மாகாணத்தில்

புலிகள் ஆயுதத்துடன் நடமாட

அரசு அனுமதிக்கக் கூடாது!

- அமைச்சர் அஷ்ரப் அரசுக்கு நிபந்தனை -

[கொழும்பு]

கிழக்கில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்படக்கூடாதெனவும் அவ்வாறு அவர்கள் அனுமதிக்கப்பட்டால் அரசிலிருந்து விலகப்போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் அரசை எச்சரித்துள்ளதாக 'சண்டே லீடர்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கிழக்கில் தமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்படவேண்டுமென விடுதலைப்புலிகள் அரசை வற்புறுத்தி வருவதுடன் தமது 4 கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அவர்கள் அரசுக்கு வழங்கிய ஏப்ரல் 19ம் திகதி காலக்கெடுவில் இதுவும் ஒன்றாகும்.

இந்நிலையில் விடுதலைப் புலிப்

(5ம் பக்கம் பார்க்க)

புலிகளின் பதிலை அரசு எதிர்பார்க்கிறது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுக்கு ஜனாதிபதி சந்திரிகா கடந்த 12ம் திகதி அனுப்பிய கடிதத்திற்கான பதிலுக்கு அரசு காத்திருப்பதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 12ம் திகதி ஜனாதி

(5ம பக்கம் பார்க்க)

ஜனாதிபதி ஆட்சி முறையை நீடிக்க அரசு நடவடிக்கை!

(கொழும்பு)

ஜனாதிபதி ஆட்சிமுறை நீடிக்கப்படுமென 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவ்வருடம் ஜூலை மாதத்திற்கு முன் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பேன் எனக் கூறி ஆட்சியைக் கைப்பற்றிய திருமதி சந்திரிகா தற்போது ஜனாதிபதி ஆட்சி முறையை நீடிக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் பௌஸி யாழ். வர விருப்பம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் பௌஸி தலைமையில் முஸ்லிம் தூதுக்குழு ஒன்று, யாழ்ப்பாணம் வருவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவிடம் அனுமதி கோரியுள்ளதாம்.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் முப்பது

(5ம் பக்கம பார்க்க)

இராணுவ தளபதி

'ஜெரி'க்கு மேலும் இரு வருடம் சேவை நீடிப்பு வழங்க முடிவு

[கொழும்பு]

இராணுவ தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வாவிற்கு மேலும் இரு வருடங்கள் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவ தளபதி ஜெரி. டி. சில்வாவின் பதவிக்காலம் இவ்வருடம் மே மாதத்துடன் முடிவடைகிறது. எனினும் இராணுவத்திற்கான புனரமைப்பு தற்போது அவசியமாகவுள்ளதால் இந்த புன

(5ம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சியில்

தாழப் பறந்து புக்காரா நோட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பகுதியில் புக்கார விமானம் ஒன்று தாழப் பறந்து பலமுறை வட்டமிட்டதில் அப்பகுதிமக்கள் பெரும் பதற்றத்திற்குள்ளாயினர்.

நேற்றுக்காலை 10-25 மணியளவில் இப்பகுதியை வட்டமிட்ட இவ்விமானம் குண்டு

(6ம் பக்கம் பார்க்க)

குன்றக்குடி அடிகளார் மதுரையில் சமாதியானார்

(சென்னை)

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனகர்த்தரும், 45வது பீடாதிபதியும், அடிகளார் என்று அன்று அன்புடன் போற்றப்பட்டவருமான தவத்திரு குன்றக்குடி அடிகளார் (70 வயது) நேற்று முன்தினம் நள்ளிரவு மதுரையில் முத்தியடைந்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

பலாலி சூட்டுச் சம்பவம்: உள்முரண்பாடு காரணமா?

பாதுகாப்பு அமைச்சு விசாரணை

(கொழும்பு)

பலாலி இராணுவ முகாம் பகுதியில் இரு இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதற்கு, படையினரிடையே இடம் பெற்ற உள் முரண்பாடு காரணமாய் இருந்ததா? என ஆராயப்பட்டு வருவதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இடைக்காடு காவலரண் பகுதியில் கடந்த 8ம் திகதி நண்பகல் இரு இராணுவச் சிப்பாய்கள் இனம் தெரியாத

(5ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

4-8-95 வரை
வியாழவக்கிரம்

யுவ வருஷ ராசிப்பலன்கள் ரூ. 10/- (கணிப்பு - சத்யா) எங்கும கிடைக்கும், இந்திய, இலங்கை சஞ்சிகைகள் கிடைக்குமிடம் ராசதுரை ஸ்ரோர்ஸ், இருபாலைச்சந்தி. (சி-1455)

MATHS

ஆண்டு 5 லிருந்து (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 28 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திராவீதி. சுண்டிக்குளி. (C 1457)

விற்பனைக்கு

பொமேரியன் நாய் விற்பனைக்குண்டு. தொடர்பு: இராசன் இரும்பு விற்பனை நிலையம், 4-ம் குறுக்குத் தெரு, 69, சின்னக்கடை, யாழ்ப்பாணம். (சி-1459)

அன்னை பூபதி நினைவாக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நோயாளர் நலன்புரிச்சங்கம் ஆதரவில் சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனையில் அன்னை பூபதியின் 7ம் ஆண்டு நினைவாக குருதிக்கொடையளித்தல். நோயாளர் நலன்புரிச் சங்க செயலக கட்டிட அடிக்கல் நாட்டுதல், மருத்துவமனைக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்குதல், முச்சக்கரவண்டி சேவை ஆரம்பித்து வைத்தல் ஆகிய நிகழ்வுகள் 19-4-95 புதன்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறவுள்ளன.

புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-04-17

திங்கள் இரவு

8-02 தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
8-20 தாயகப்பாடல்கள்
8-30 செய்திகள்
8-40 தரிசனம் நிகழ்ச்சியில் பெண் நாதஸ்வர கலைஞர் திருமதி கோபாலமுத்துலட்சுமி அவர்களுடனான செவ்வி

1995-04-18

செவ்வாய் காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 இன்றைய தாரகை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 தாயகப்பாடல்கள்

தமிழீழ வானொலி
நிகழ்ச்சி நிரல்
1995-04-17

திங்கள் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 ஆழியமுதம்
5-30 மாணவர் பக்கம்
6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
6-02 நேயர் நெஞ்சம்
6-15 விளையாட்டுச் செய்திகள்
6·20 என் தெரிவு
6-30 மாலைநிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

ஆதாரம் சஞ்சிகை வாசகர் வட்ட விமர்சன அரங்கு

[யாழ்ப்பாணம்]

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வெளியிடப்படும் ஆதாரம் சஞ்சிகை பற்றிய விமர்சன அரங்கு இன்று 17 ம் திகதி திங்கட்கிழமை வட்டு-கிழக்கு துறட்டிப்பனை அம்மன் கோவிலடியில் வாசகர் வட்டத் தலைவி செல்வி இ. நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

வட்டு கிழக்கு வாசகர் வட்டத்தினரால் நடாத்தப்படும் இவ் விமர்சன அரங்கில் சங்கானை பிரதேசசபை செயலர் வட்டு கிராம உத்தியோகத்தர், வட்டு சுப்பிரமணிய வித்தியாலய அதிபர் மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதிநிதிகள், கிராமிய உற்பத்திக் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டு தமது விமர்சனங்களையும், கருத்துக்களையும் பரிமாறவுள்ளனர்.

காலையும் மாலையுமாக நடைபெறும் நிகழ்வுகளில் காலை நிகழ்வுகளில் வட்ட மட்ட உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகளாக துலாப்பட்டை மூலம் நீர் இறைத்தல், தோட்டம் கொத்துதல், உழுதல், பலமரம் ஏறுதல், கிடுகு பின்னுதல், குட்டான் இழைத்தல் போன்றன

(5ம் பக்கம் பார்க்க)

புதிதாககட்ட முடிவு

(நெல்லியடி)

ஸ்ரீலங்கா விமானப்படை குண்டுவீச்சு தாக்குதலினால் கடந்த வருடம் சேதமடைந்த பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொலிகண்டிக்கிளையை அதே இடத்தில் மீண்டும் புதிதாக கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. -160

தந்தை செல்வா நினைவஞ்சலி

(கொழும்புத்துறை)

தந்தை செல்வாவின 18வது நினைவஞ்சலி வழிபாடும், பிரார்த்தனையும் யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரப் பெருமான் ஆலயத்தில் இம் மாதம் 26ம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறும்.

இவ்வைபவத்தைத் தொடர்ந்து தந்தை செல்வா நினைவாலயத்தில் மலரஞ்சலி வழிபாடு இடம்பெறும். (154)

கிராமிய மின்வழங்கல் திட்டம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதியும் மக்களின் அன்றாட தேவை கருதியும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியால் தாவடிப் பகுதிக்கு மின் பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இம் மின் வழங்கலானது முதலில் இப் பகுதிக்கு வழங்கப்பட்டாலும் குடாநாட்டின்ஏனையபகுதிகளுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

புதிய நிர்வாகிகள்

[கொழும்புத்துறை[

வடமராட்சிரீதியில் தனியார் கல்விநிறுவன ஒன்றியபொதுச் சபைக் கூட்டமும், புதிய உத்யோகத்தர் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.புதிய உத்தியோகத்தராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ந. சங்கரலிங்கம், செயலாளர்: அ. இராசரத்தினம், பொருளாளர்: மு. சுந்தரலிங்கம்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக எஸ். முரளி, வே. சங்கரசிகாமணி, பொ. வியாகேசன், கு. இராசரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். 145 -

தியாகி அன்னை பூபதி நினைவாக

உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் 7ம் ஆண்டு நினைவாக இன்று உண்ணாவிரதம் நடைபெறும் இடங்கள் வருமாறு:

பளை மத்திய பகுதி, வளர்மதி ச. ச. நிலையம் மட்டுவில் நுணாவில், நாவற்குழி மகா வித்தியாலயம், உடுப்பிட்டிச் சந்தி பொதுப்பந்தல், அல்வொல்லை இளைஞர் ச. ச. நி. முன்றல், அல் மாலிச் சந்திப் பிள்ளையார் கோவில முன்றல்,

(5-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நினைவில் வரலாற்றுப் புகழ்பெற்று நிற்கும் இருவர்

யாழ். பல்கலைச்கழகத்தின் வரலாற்றில் முக்கிய இடம் பெறுவருள் இருவரின் மறைவு நினைவுகள் அண்மையில் மீட்கப்பட்டன.

ஒன்று பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் நினைவு, மற்றது பேராசிரியர் அ. துரைராசா காலத்திற்கு முன்னர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் காலததில் பதிவாளராக விளங்கிய திரு. வி. என். சிவராசா அவர்கள்

திரு. வி. என். சிவராசா அவர்கள் மறைந்து ஒருவருட காலமாகின்றது அண்மைக்காலத்து அரச நிர்வாக வரலாறறில் ஒரு முக்கிய இடம் பெறுபவர் திரு, வி. என் சிவராசா வடக்கு கிழக்கு மாகாணசபையின் முதலாவது பிரதம செயலாளராகக் கடமையாற்றிய பெருமை அவரைச் சாரும். இவர் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவலர்கள் அமைச்சில் சிரேஷ்ட உதவி ஆலோசகராகவும், கிறைசேரியில் சிரேஷ்ட உதவி செயலாளராகவும், இந்து சமய திணைக்களத்தின் பணிப்பாளராகவும், அதன் பின்னரே அவர் யாழ் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்பணியை மேற்கொண்டிருந்தார்.

பல்கலைக்கழகப் பதிவாளராக அவர் பதவி வகித்த காலத்தில் பல்கலைக்கழக அபிவிருத்திக்கு அவர் பெரும் தொண்டாற்றினர். பல்கலைக்கழக ஆசிரியர்களுடனும், நிர்வாகத்துறை அலுவலருடனும், அவர் மிக அன்னியோனியமாக தனது உறவினை மேற்கொண்டிருந்தா. 1987ம் ஆண்டு இந்திய அமைதிகாக்கும் படையினால பல்கலைக்கழக கட்டிடங்கள் சேதமுற்றநிலையில் ஒரு குறுகிய காலத்திலேயே பல்கலைக்கழகக் கட்டிடங்களை புனரமைத்து, புத்துயிர் கொடுத்து பல்கலைக்கழகம் இயங்குவதற்கு அரும்பாடுபட்டார். இதனால் அவர் தமிழ்மக்களின் அபிமானத்தைப் பெற்று முதலாவது அதி உயர்தர நிர்வாக அதிகாரியாக விளங்கினர்.

இவர் பல்கலைக்கழகத்தில் இயங்கும் பரமேஸ்வரன் ஆலயம் புத்துயிர் பெற்று விளங்குவதற்கு இக் கோயிலின் இராஜகோபுரம்ஒன்று உருவாகுவதற்கும் சூத்திரதாரியாக இருந்தார். இக்கோயில் விடயங்களில் மிகுந்த அக்கறை செலுத்தி அவ்வாலயத்தின் கருமங்களில் முன்னின்று அரும் தொண்டாற்றினர். யாழ். பல்கலைக்கழகம் என்றும் அவரை நன்றியுடன் நினைவு கூரும்.

திரு. வி. என். சிவராசா அவர்கள் பேராசிரியர் அ. துரைராசாவின் நண்பர். ஒரே வகுப்பு மாணவர், இருவரும் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்கள். வடமராட்சி என்று அழைக்கப்படும் பிரதேசத்தில் 1934ம் ஆண்டாகிய ஒரே ஆண்டில் பிறந்தவர்கள் என்ற பெருமையும் இவர்கள் இருவரையும் சாரும்.

இவ்விருவரும் சாதாரண குடிமக்களை நேசிக்கும் அதிஉயர் விசேட பண்புகளைக் கொண்டவர்கள், இவ்விருவரும் இப்பல்கலைக்கழகத்தில் ஒரே காலப்பகுதியில் வேலை செய்திருந்தால் இன்று பல்கலைக்கழகம் இலங்கையிலே முதலாவது உர பல்கலைக்கழகமாக திகழ்ந்திருக்கும். தமிழ் மக்கள் செய்த ஓர் துர்பாக்கிய நிலைதான் இந்த பெரும் தகுதியுடைய இரு உயர் அதிகாரிகளும் ஒருமித்த ஒரே காலகட்டத்தில் வேலை செய்யாமல் போனது தமிழ் மக்களிற்கு ஓர் பாரிய இழப்பாகும்.

பேராசிரியர் அ. துரைராசா இன்று யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகப் போற்றப்படுபவராகிவிட்டார். அவர் சிறப்புக்களை இலங்கை முழுவதும் முன்னோர் போற்றும் சிறப்பினை ஆங்கிலப் பத்திரிகைகளில் தொடர்ந்து வரும் நினைவுக் குறிப்புக்களிலிருந்து தெரியக் கூடியதாகவுள்ளது. அண்மையில் அவரது ஆரம்ப ஆங்கிலக் கல்விப் பாடசாலையான உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி அவர் நினைவினைக் கொண்டாடிற்று.

பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் சேவை பல்கலைக்கழகத்தில் நின்று விடாது. வெளியுலகையும் உட்படுத்தி நின்றது. அமரராகிவிட்ட இவ்இருவரது நினைவும் தொடர்ந்துதமிழ் மக்களால் வரலாற்று மரபு தவறாது போற்றப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள்.

குறிப்பு: 18-04-1995 செவ்வாய்க்கிழமை மு. ப. 8-30 மணியளவில் ஊழியர் சங்கப் பொது அறையில் ஊழியர் சங்கத்தலைவர் திரு. ச. க. தனேந்திரன் தலைமையில் அமரர் பேராசிரியர் அ. துரைராசாவின் உருவப்படத்தினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி அவர்களால் திரைநீக்கம செய்து வைக்கப்படும்.

அனைத்து ஊழியர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ச. க. தனேந்திரன்
(தலைவர்)
யாழ்/பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

(எ-4879)

மணிவாக்கு

பொய் சொல்வது கேவலமல்ல; அதுமனித இயல்பு. அந்த பொய்யை நம்புவது தான் கேவலம்.

- அரேபிய பழமொழி.

நமது நோக்கு

சக்தி வளம்

''மாற்றுச் சக்தி வளங்களை இனம் காண்பது தமிழீழத் தன்னிறைவுக்கு மிக அவசியமானது,'' என்பதை விளக்கி பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் எண்ணைவள நாடுகள் எரிபொருள்தளின் விலை அதிகரிப்பைச் செய்த போது, பல மேற்கு நாடுகள் அதிர்ச்சியடைந்தன.

இதனால் - மாற்றுச்சக்தி வளங்கள் பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டது; ஆய்வுகள் பல தொடர்ந்தன.

இதேபோல — இரண்டாவது உலகப் போரின்போது, எரிபொருள் இறக்குமதிக்கு இடையூறுகள் ஏற்பட்ட வேளை, மாற்றுச் சக்தி வளங்கள் கைகொடுத்து உதவின என்பதை நாம் மறந்து விடலாமா?

குறிப்பாக - ஜேர்மனியில் எரிவாயு பல துறைகளிலும் பயன்படுத்தப் பட்டது.

அதே ஜேர்மனி - இன்றும் எரிபொருளை நம்பாது காற்றலைகளை நிறுவி ஆய்வுகள் நடாத்தி வருகிறது.

இன்று - எண்ணை வளம் ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்கு மாத்திரமே உதவும் என்ற உண்மை உணரப்பட்டுள்ளது.

அதனால் - சூரியசக்தி, கடலலைகள், காற்றாடிகள் போன்ற இயற்கைச் சக்திகளை மனித தேவைக்குப் பயன்படுத்தும் ஆய்வுகள் தொடருகின்றன.

இதேவேளையில் — எரிபொருள் தடை என்ற ஆயுதத்தைக் காட்டிஎமது பகுதி மக்களை நிரந்தர அடிமைகளாக்க நாம் இடம் கொடுக்கலாமா?

அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான எரிபொருளின்றி மக்கள் படும் துன்பம், சில அரசியல் வாதிகளுக்கு அரசியற் பிரச்னையாக மாத்திரம் தெரிகிறது.

இந்த நிலை மாறவேண்டுமாயின்பிறருடைய அழுத்தங்களை, தடைகளை உடைத்தெறிய வேண்டுமாயின், காற்றுச் சக்தி வளங்களை இனம் கண்டு தமிழீழத் தன்னிறைவை நோக்கி நடைபோடுவது மிக அவசியம்.

அண்மையில் - தமிழக அரசு, மாற்றுச்சக்திவளப் பாவனைக்கு அமெரிக்கக் கம்பனி ஒன்றுடன் ஒப்பந்தம் செய்தது,

எமது பகுதியின் இயற்கைச் சக்தி வளங்களை இனம்காணப் பிறநாட்டு அனுபவங்களும் அறியப் படுவது அவசியம்.

வடகிழக்கு இணைப்பை ஜே.வி.பி ஒருபோதும் ஆதரிக்கமாட்டாது

— நிஹால் கலப்பதி கூறுகிறார்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பை ஜே. வி. பி. ஒருபோதும் ஆதரிக்கமாட்டாது. இணைப்பு என்பது அங்குவாழும் சகல இனங்களுக்கும் செயலும் அநீதியாகும் என ஜே. வி. பி. எம். பி யான நிஹால் கலப்பத்தி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்; இதுவரை பதவிக்கு வந்த முதலாளித்துவ கட்சிகளும், அக்கட்சிகளின் தலைவர்களும் சந்தர்ப்பவாத இடதுசாரித் தலைவர்களுமே இந்நிலையை ஏற்படுத்தினர் எனவே அவர்களுக்கு நிரந்தரமாக இல்லாவிட்டாலும் ஓரளவிலான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க முடியும். அவ்வாறு தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுத்தால் அவர்களது நிலைப்பாட்டிற்கே அச்சுறுத்தலாக அமைவதால் அவர்கள் ஒரு தீர்வினைப் பெற்றுக் கொடுக்கமாட்டார்கள். முழுமையாக ஜனநாயகத்தை நாட்டில் அமுல் செய்வதன் மூலம் சுதந்திரம், சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டு சமத்துவத்தின் மூலம் மட்டுமே இப்பிரச்னைக்குத் தீர்வுகாணமுடியும். சோஷலிச அமைப்பு மூலம் மட்டுமே இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுக்க முடியும். அதற்கப்பால் காணப்படும் தீர்வு தற்காலிகமாக பதவியிலிருந்து வரும் முதலாளித்துவ அரசாங்கங்கள் தமது நிலைப்பாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சிறுபான்மை மக்களது உரிமைகளை அடிக்கடி குறைத்தார்கள், இல்லாமல செய்தார்கள் இதன் காரணமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் அவநம்பிக்கை ஏற்படத் தொடங்கியது. இதனைப் பயன்படுத்திய இனவாதிகள், முதலாளித்துவவாதிகளின் ஆதரவைப்பெறும் வடக்கிலுள்ள சில தமிழ் அமைப்புக்கள் இந்தப்பிரச்னையை இனப்பிரச்னையாக அர்த்தம் கொடுத்து நடத்தி வருகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை இதனை இனப் பிரச்னையாக நாம் நோக்கவில்லை. இது ஒரு தேசத்து நெருக்கடியாகும்.

இதுவரை பதவியிலிருந்த அரசுகள் தமிழ் மக்களது கலாசார ரீதியான, மொழி ரீதியான உரிமைகளை வழங்க மறுத்துவிட்டன. சிங்கள, தமிழ். முஸ்லிம் இனங்களுக்கிடையேமோதல்களைஏற்படுத்துவதற்காகவே இப்படிச் செயற்பட்டார்கள். சிங்கள மொழியை உத்தியோக பூர்வ மொழியாக்கினார்கள். இதனால் பிரச்னை உருவானது

சகலருக்கும் சகல உரிமைகளும் சமமானதாக இருக்க வேண்டும் என்பதே எமது கருத்து ஒரு மதம் மட்டும் தான் பிரதான மதமாக ஒரு மொழி மட்டும் நாட்டின் பிரதான மொழியாக இருப்பதனை நாம் அனுமதிக்கமாட்டோம் எந்த ஒரு மதத்துக்கோ மொழிக்கோகூடுதலான சலுகைகளிலிருக்கக் கூடாது. நாட்டிலுள்ள சகல மொழிகளும் அரச மொழியாக இருக்க வேண்டும் என்றார். (சி)

பலதும் பத்தும்

பெயர் வைத்தல்:

பெயர் வைத்தலில் நாட்டுக்கு நாடு வேறுபாடுகள்காணப்படுகின்றன. பெரு நாட்டில இன்காஸ் பழங்குடி மக்கள், குழந்தைக்குத் தாய்மாமன் தான்பெயர் வைப்பாராம், குழந்தைக்கு மொட்டையடித்தபின்.

பிரேசில் நாட்டில் மூதாதைப்பெயரோடு ஒரு விலங்கினப் பெயரும் சேர்க்கப் படும். இதேபோன்ற வழக்கம் வடஅமெரிக்காவின் ஒசாக்காப் பழங்குடியினரிடையும் இருந்தது அவுஸ்திரேலியப் பழங்குடியினர் முன்னோர் ஆவியை ஒட்டிப் பெயர் வைத்தனர்.

ஆனால் தென்னமெரிக்காவிலும், தென்னிந்திய நீலகிரிப் பகுதியிலும் இறந்த முன்னோர் பெயரை மீண்டும் வைப்பதில்லை, அமெரிக்க இந்தியப் பழங்குடி மக்களிடையே ஒருவர் நோய்வாய்ப்பட்டால் பெயரை நீக்கிவிட்டுப் புதுப்பெயர் வைப்பார்களாம், காரணம்? கெட்ட ஆவியிடமிருந்து காப்பாற்ற...!

— மயூரன்

இராசி பலன்

17-04-1995

திங்கட்கிழமை

(தமிழுக்கு சித்திரை -04)

துதியை பி. ப. 2-06 வரை விசாகம் மரணயோகம் பின் நிரவு 12-29 வரை; இராகு காலம் காலை 7-34 முதல் 9-04 வரை. சுபவேளை நண்பகல் 12-00 முதல் 1-34வரை.

மேஷம்: அந்நியர் உதவி, கெட்டபெயர், அலைச்சல்.

இடபம்: பிரயாசமிகுதி, தொழில் லாபம், வீட்டில் மகிழ்ச்சி.

மிதுனம்: அநாவசிய தலையீடு, பணவரவு. நற்கருமஈடுபாடு.

கடகம்: நினைத்ததைச் சாதிக்க முடியாமை, தொழில் குறைவு, வீண்வாதம்.

சிங்கம்: மார்பில் ரோகம், பணியாள்துயர், நிலைதடுமாற்றம்.

கன்னி: பிறர்அறிவுரை, வெற்றிக்களிப்பு, அதிகார சித்தி.

துலாம்: பயணக் கஸ்டம், மனஸ்தாபம், கைப் பொருள் இழப்பு.

விருச்சிகம்; பங்காளர் சகாயம், சுபநிகழ்வு புதிய முயற்சி

தனுசு: பொறுப்பற்ற செயல், தொழில் ஊக்கமின்மை, கடன்.

மகரம்: சகோதர உதவி சாதனை முயற்சி. சுபக்கனவு

கும்பம்: களத்திரசுகம், நற்செய்தி, புதிய உறவு.

மீனம்: கடுமையான போக்கு, தேவையற்றசெயல் அமைதி கெடல்.

— ஜோஸ்யர்

சமஷ்டிமுறைத் தீர்வுக்கு இனவாதிகள் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு வழங்கப் படுவதற்கு கடும்எதிர்ப்புதெரிவித்து தீவிர சிங்கள அமைப்புகள் பிரசாரங்களை தொடங்கியுள்ளன.

சிங்கள அடிப்படைவாத அமைப்புகளான சிந்தன பிரதேசய, ஜாதிக சிந்தன அமைப்பு, பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள், தேசப்பிரேமி பிக்கு பெரமுன உட்பட பல அமைப்புகள் இது போன்ற பிரசாரத்தை ஆரம்பித்துள்ளதுடன் தமது எதிர்ப்பையும் தெரிவித்து வருகின்றன.

இனப்பிரச்னை தீர்வுவிடயத்தில் தற்போதைய அரசின் போக்கு குறித்தும் இவைகடும் விமர்சனங்களையும் தெரிவித்துள்ளன. மேலும் பல பௌத்த பிக்குகளும் தமது எதிர்ப்பை தெரிவித்திருப்பதுடன் சிங்களபெரும்பான்மை மக்களின் விடயததில் அரசு அக்கறை காட்டவேண்டுமெனவும் கூறியுள்ளனர்

இந்த அமைப்புக்களின் எதிர்ப்பு பிரசாரம் தெற்கில் இனவாத உணர்வை தூண்டிவருவதாகவும் இதனால் மாசமான விளைவுகள் ஏற்படலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (சி)

லேக்கவுஸின் 70 வீத பங்கு மக்களுக்கு விற்கப்படும்

(கொழும்பு)

'லேக்கவுஸ்' நிறுவனத்தை மக்கள்மயப்படுத்துவது சம்பந்தமாக விசாரணை செய்த ஆணைக்குழு தனது அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளதுஎன்று தெரிவிக்கப்படுகிறது

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது: பொதுசன முன்னணி அரசாங்கம் தேர்தல் வாக்குறுதியினபடி, லேக்சவுஸ்நிறுவனம சுதந்திரமாக செயல்படுவதற்கு தனியார் மயப்படுத்தப் படும் என்ற வாக்குறுதியின் பிரகாரம் இந்த ஆணைக்குழுவை நியமித்துள்ளது

ஆணைக்குழுவின் சிபார்சின்படி நிறுவனத்தின் 70 வீதமான பங்குகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும் இதில ஒருவர் 25,000 பங்குகள் வாங்கலாம். இந்தப் பங்கினை வாங்கியவர் இன்னொருவருக்கு விற்கலாம். இதனால் லேக்கவுஸ் நிறுவனத்தின் கூடுதலான பங்குகள் ஒரு குடும்பத்துக்கோ ஒரு குடும்பத்தின் பல உறுப்பினர்களுக்கு சேரலாம். பதினொரு பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும் இந்த நிறுவனத்தில் 6 பேர் மக்களால் தெரிவு செய்யப்படுவார்கள். இதனால் கூடுதலான பங்கு வாங்குபவர்கள் தங்கள் அதிகாரத்தை

(5ம் பக்கம் பார்க்க)

வெளிச்சம் இதழ் வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைபுலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் கலை இலக்கிய சமூக இதழின் சித்திரைமாத இதழ் வெளிவருகின்றது.

இந்த இதழில் ''ஒரு சத்திய யுத்தத்தில் தர்மமே வெற்றி கொள்ளும்'' எனனும் தேசியத் தலைவரின் குறிப்புரையும், ப. புஷ்பரட்ணத்தில் 'ஈழத் தமிழர் வரலாறு', சு. சங்கிலி குமாரனின் 'அற்றுப்போன அழகு' அடேல் ஆனின் 'உடையாத விலங்குகள்' ஆகிய கட்டுரைத் தொடர்களும், மாலிகா, கல்வயல் வே குமாரசாமி, மயன்/2 ஆகியோரின் கவிதைகளும் இடம்பெறுகின்றன.

இவற்றுடன் சாந்தனுடனான நேர்காணலும், ந. கிருஷ்ணசிங்கம், தாமரைச் செல்வி, நா. பாஸ்கரன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் ஆகியோரின் சிறுகதைகளும், சி சதாசிவனின் கட்டுரையொன்றும் இன்னும் பல அம்சங்களும் இந்த இதழில் இடம்பெறுகின்றன.

தயாவின் ஓவியத்தை அட்டைப்படமாகத் தாங்கி வெளிவரும் இந்த இதழ் வெளிச்சத்தின் முப்பத்திஆறுவது இதழாகும். சி

படைகளிலிருந்து தப்பிய 22,000 சிப்பாய்கள்

ஜே.. வி. பியுடன் இணையும் அபாயம்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற 22,000 சிப்பாய்கள் ஜே. வி. பி. யினருடன் இணையும் அபாயம் இருப்பதாக இராணுவ புலனாய்வுத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

இதனை அரசு மறந்துவிடக் கூடாது. எனவே படைகளை விட்டு தப்பிச் சென்றவர்கள் விடயம் மிகக் கவனமாகக் கையாளப்பட வேண்டுமெனவும் புலனாய்வுத்துறை எச்சரித்துள்ளது. இவர்கள் அனைவரும் பல வருட கால சிறந்த இராணுவ பயிற்சிகளை பெற்றிருப்பதுடன் நவீனரக ஆயுதங்களை கையாளும் திறமையையும் பெற்றுள்ளார்கள். இவர்களை எப்படியாவது மீண்டும் படைகளில் இணைக்க வேண்டும் அல்லது ஜே. வி பி யுடன் இணையாமல் பார்க்க வேண்டுமெனவும் புலனாய்வுத் துறையினர் கூறியுள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதிஆட்சி முறை எதிர்வரும் ஜூலை மாதத்திற்குமுன் ஒழிக்கப்படுமென்ற தமது கூற்றிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா தவறுவாரேயானால் தெற்கில்போராட்டங்களை நடத்தப்போவதாக ஜே. வி. பி. எச்சரிக்கைவிடுத்துள்ளது.

தற்போது தெற்கில் ஜே. வி. பி.யின் வளர்ச்சி துரிதமடைந்து வருவதால் அரசுக்கு இது பெரும் தலைவலியாக அமைந்திருக்கிறது. ஜே. வி பி.யின் நடவடிக்கை பற்றி தினமும் பல அறிக்கைகளைப் பொலிசார் பொலிஸ் தலைமையகத்திற்கு அனுப்பிய வண்ணமே உள்ளனர்.

அண்மைக் காலமாக தெற்கில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுக்கும் ஜே. வி பி.யே தொடர்பென அரசு நம்புவதாகவும் கூறப்படுகிறது. (சி)

உற்பத்தியைப் பெருக்குவோம்

ஊக்கமாய் உழைத்திடுவோம்

★ அம்பாறை மாவட்டத்தில்

இராணுவக் கெடுபிடிகளினால் விவசாயச் செய்கை பாதிப்பு

[அம்பாறை]

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெருமளவு நிலப்பரப்புகள் படையினரின் கெடுபிடிகளால் செய்கைபண்ணப்படாமலிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட தமிழ் விவசாயிகள் சிறிலங்கா அரசுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள், சுற்றிவளைப்புகள், மற்றும் தேடுதல் நடவடிக்கைகளினால் இப்பகுதியிலுள்ளவிவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

இப்பகுதியில் சில இடங்களில் தமிழ் விவசாயிகள் நெல்லை பயிரிட்டபோதும் அவற்றை நியாய விலைக்கு விற்பனை செய்யமுடியாதுள்ளனர்.

இதேவேளை இங்குள்ள சிங்கள விவசாயிகளிடமிருந்து கூடிய விலைக்கு நெல் சந்தைப்படுத்தும் திணைக்களம் நெல்லைக் கொள்வனவு செய்துவருகிறது.

நெல் கொள்வனவு மற்றும் விவசாய செய்கை பாதிப்புக் குறித்தும் அம்பாறைமாவட்ட தமிழ் விவசாயிகள் அரசுக்கு அனுப்பிவைத்துள்ள தமது மகஜரில் தெரிவித்துள்ளனர். ரி

தீவகத்தில் மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர்

(அரியாலை)

இராணுவக்கட்டுப் பாட்டிலுள்ள தீவக மக்கள் எந்த நேரமும் அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருப்பதாக அங்கிருந்து வந்த ஒருவர் தெரிவித்தார்;

கொழும்பிலிருந்து தமது தாயாரைப் பார்க்க தீவகத்திற்கு சென்ற இவர் திரும்பி வந்தபோது அதனைத் தெரிவித்தார். காலை 6 மணிக்குப் பின்பு வெளியில் செல்பவர்கள் மாலை 6-மணிக்கு முன்பு வீடுகளுக்கு வந்துவிட வேண்டும் என படையினரால் அச்சுறுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

தாங்கள் அடிமைச் சீவியம் வாழ்ந்து கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். கிழமைக்கு கிழமை உணவுப் பொருட்கள் தந்தபோதிலும் உறவினர்கள் இல்லாத சந்தோசமற்று வாழ்ந்துகொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தாகவும் அவர் கூறினார்.

மரங்கள் காடுகள் போல் வளர்ந்து விட்டதால் அங்கு விறகுப் பஞ்சமில்லை எனவும் கூறினர். 59-சி

ஆறுயிரம் அகதிக்குடும்பங்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

(கொழும்பு)

ஆறுயிரம் அகதிக்குடும்பங்களை அவர்கள் முன்னர் இருந்த இடங்களிலேயே குடியமர்ததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சுமார் 41,000 இடம்பெயர்ந்த குடும்பங்கள் அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள 23 கிராமங்களிலும், அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் அமுல்செய்யப்படவுள்ளது.

துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து புனர்வாழ்வு-புனரமைப்பு அமைச்சின் செயலாளர் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அகதிமுகாம்களில் வசிப்பவர்களின் நீர் விநியோக சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

புத்தளம் மாவட்டத்திலுள்ள அகதிமுகாம்கள் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பின் பணிப்புரைகளுக்கு அமைய விரைவில் பழுது பார்க்கப்படவிருக்கிறது. ரி

நிவாரணம் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத்தில் வெருகல், முகத்துவாரம் பகுதிகளிலுள்ள தமிழ் மக்களுக்கான நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் தமது பாதிப்பு குறித்து இங்குள்ள மக்கள் அரச அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளனர். ரி

இன்று

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையின் வெள்ளி விழா ஆண்டும், தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு காரை சிறுவர்கள் ஆண்டு தோறும் கொண்டாடும் 25 வது வருட கலைநிகழ்ச்சிகளும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கள் பி. ப. 2 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில நடைபெறும்.

பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை 22-வது வருடாந்த பொதுக் கூட்டம் இம்மாதம் 30-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு சட்டத்தரணி இராசரட்ணஜேஸவரன் தங்கராசா தலைமையில் திருநெல்வேலி செங்குந்தா இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. -ம

ஆசிரியர்களுக்கு ஜனவரிமுதல் புதிய சம்பளத்திட்டம் அமுல்!

[கொழும்பு]

கல்வி உயர்கல்வி அமைச்சு ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டத்தை அடுத்த மாதத்திலிருந்து அமுல் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.

புதிய சம்பளத் திட்டம் ஜனவரி மாதத்திலிருந்து அமுலுக்கு வந்துள்ளது. எனவே ஆசிரியர்களுக்குக் கிடைக்க வேண்டிய நான்கு மாதச் சம்பளப் பணமும் வழங்கப்படும். கல்வி உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான இதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

அக்டோபர் 6-ம் திகதி அமைக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைக்கு அமைய புதிய சம்பளத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது இதனால் 1,90,000 ஆசிரியர்கள் நன்மையடைவார்கள்.

இது தொடர்பான விபரங்கள் அடுத்த வாரம் பத்திரிகைகளில வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பல்வேறு தரங்களிலுள்ள ஆசிரியர்களை ஆசிரியர் சேவைக்குள் கொண்டுவர மாகாண கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். -ரி

சென்னை குண்டு வெடிப்பு

மத்திய புலனாய்வு பிரிவிடம் விசாரணை ஒப்படைப்பு

[சென்னை)

சென்னை சிந்தாரிப்பேட்டை இந்துமுன்னணி தலைமை அலுவலகத்தில் நடந்த குண்டு வெடிப்பு சம்பந்தப்பட்ட வழக்கை மத்திய புலனாய்வுத துறையிடம் ஒப்படைக்க தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது.

முதல்வர் செல்வி ஜெயலலிதா இதுதொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதர மாநிலங்களிலுள்ள அமைப்புக்கள் இந்தச் சம்பவத்தில் தொடர்பு கொண்டிருக்கக் கூடுமென்று சந்தேகப்படுவதால் இந்த வழக்கு குறித்த புலன் விசாரணையை மத்தியபுலனாய்வுத்துறையிடம் ஒப்படைக்க முடிவுசெய்திருப்பதாக முதல்வர் கூறினர்

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட சண்முகம் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்படும் என்றும் அவர் கூறினர். இந்தச் சம்பவம் குறித்த விசாரணையை மத்திய புலனாய்வுத்துறையிடம் விடவேண்டும் என பல கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து தமிழகத்தின் சில பகுதிகளில் பல வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன.

கோயம் புத்தூரில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு உயிரிழந்தார். சென்னையில் இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் மேலும் ஒருவர் கொல்லப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக ஐந்துபேர் கைதுசெய்யப்பட்டனர்.

இக்குண்டு வெடிப்பைத் தொடர்ந்து சென்னை நகரில் சட்டம் ஒழுங்கை பாதுகாத்து அமைதியை நிலைநாட்ட தமிழக சிறப்பு காவல் படையின் இரு கூடுதல் பிரிவுகள் பதற்றம் ஏற்படக்கூடிய இடங்களில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளன. ரி

குன்றக்குடி...

(1ம் பக்கத் தொடர்ச்சி[

ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீமத் தெய்வ சிகாமணி அருணாசலதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்ற முழுப் பெயருடைய குன்றக்குடி அடிகளார் சென்ற செவ்வாய்க்கிழமை மதுரை தனியார் மருத்துவ மனையொன்றில் உடல் நலக் குறைவு காரணமாக அனுமதிக்கப்பட்டார். குன்றக்குடி அடிகளாரின் உடல் தற்போது குன்றக்குடி மடத்துக்கு எடுத்து செல்லப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

தமிழறிஞராகவும் சிறந்த பேச்சாளராகவும், அனைத்துக் கட்சி தலைவர்களினதும் அன்புக்குரியவராகதும் திகழ்ந்த திரு. குன்றக்குடி அடிகளார் தமிழ்நாடு தெய்வீகப் பேரவை அருள்நெறி திருக்குறள் பேரவை ஆகியவற்றின் தலைவராக இருந்தவர்.

சமய நல்லிணக்கத்திற்காக அயராது பாடுபட்ட அவர் தாம் வசித்த குன்றக்குடிக் கிராமத்தை அகில இந்திய அளவில் சிறந்த கிராமமாக உருவாக்கி அதற்காகப் பல விருதுகளையும் பெற்றார்.

அகில இந்திய வானொலியில் சமய, இலக்கிய மற்றும் தொழில் மேம்பாடு நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள திரு. குன்றக்குடி அடிகளார் 35 நூல்களையும் பல கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார்.

குன்றக்குடி அடிகளாரின் மறைவுக்கு பல அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள் உட்பட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

மிகச் சிறந்த தமிழறிஞரும் சிறந்த ஆன்மீக வாதியும் சிறந்த கல்வியாளரும் சமூக சீர்திருத்த சிந்தனையாளருமான அடிகளாரின் மறைவு அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது என்று மத்திய தொழில்துறை இணை அமைச்சர் திரு. எம். அருணாசலம் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். ரி

இலங்கையில் தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. இவ்வருடம்ஜனவரிமாதம் 2கோடி 22 லட்சம் கிலோ தேயிலை உற்பத்தியானது.

இது இதுவரை காணாத ஆகக்கூடுதலான உற்பத்தியாகக் கருதப்படுகிறது சி. ரி' சி. தேயிலையின் உற்பத்தி அதிகரித்து வருவதுடன் உத்தேச இலக்குகள் விரைவில் அடையப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சி. ரி. சி. தேயிலையின் உற்பத்தி 18 லட்சம கிலோ கிராமினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. தனியார் துறையினர் இதில் ஈடுபாடு காட்டியதே இதற்குக் காரணமாகும். ரி

சரஸ்வதி சனசமுக நிலைய 39-வது ஆண்டு விழா

[யாழ்ப்பாணம்]

கைதடி-மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 39-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி இல்ல விளையாட்டுப் போட்டி மற்றும் மரதன் ஓட்டப் போட்டி, கலாசார நிகழ்வுகள் கைதடியில் நிலையத் தலைவர் திரு. க. இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சியில் நடைபெறும் மரதன் ஓட்டப்போட்டிக்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இல்ல விளையாட்டுப்போட்டி இம்மாதம் 30 ம் திகதியும், கலாசார நிகழ்வுகள் மே 7-ம் திகதியும் நடைபெறவுள்ளது.

பேச்சுவார்த்தைகள் பாதிப்பின்றி நடைபெறும்

— கலாநிதி உயாங்கொட

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் பாதிப்புகள் இன்றி தொடர்ந்து நடைபறுமென்று கலாநிதி ஜெயதேவ உயாங்கொட தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

கலாநிதி ஜெயதேவ உயாங்கொட 4-ம் கட்ட பேச்சுவார்த்தையில் அரச பிரதிநிதியாக கலந்துகொண்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பேச்சுவார்த்தையின் பின்னர் நுவரேலியாவிலுள்ள ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடத்திய உயர் மட்ட ஆலோசனையிலும் கலாநிதி உயாங்கொட கலந்து கொண்டார். ரி

"சுயநிர்ணய உரிமைமட்டும் அவல வாழ்வை நீக்கும்"

[கொழும்பு]

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை கிடைத்தால் மட்டுமே அவர்களின் அவல வாழ்வு நீங்கும் என மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டு எம். பி. உரை

அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். க-ரி

அன்னைபூபதி பொதுஅறிவுத்தேர்வு - 95
தேசியமட்ட பரிசில் பெறுவோர் விபரம்

[யாழ்ப்பாணம்[

அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வில் தேசிய மட்டத்தில் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் பெறுவோர் பட்டியல் வருமாறு:

ஆண்டு 6

விவேகானந்தன் கோகுலன் யாழ் இந்து - நல்லூர் கோட்டம் 100 புள்ளி, சாளினி சின்னத்தம்பி - சுண்டுக்குளி மகளிர் யாழ்ப்பாணம்-86, இலட்சுமணசர்மா கேதாரசர்மா - யாழ் இந்து - நல்லூர் 81.

ஆண்டு 7

ம. தேவகுமரன்-கிளி/திருவையாறு ம. வி. கரைச்சி - 95, விஸ்வநாதன் விபுலன் - யாழ் இந்து - நல்லூர் 91, கனக சபாபதி வாசுதேவா - வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி சங்கானை - 83.

ஆண்டு 8

தில்லைநாதன் கோபிநாத் யாழ் இந்து - நல்லூர் - 86, பரராஜசிங்கம் நந்தகுமார் யாழ். இந்து - நல்லூர் -85, யோகேஸ்வரன் திவாகர் மானிப்பாய் மெமோறியல் - சண்டிலிப்பாய் - 84,

ஆண்டு 9

புவனேந்திரன் நிதர்சன் யாழ் இந்து - நல்லூர் - 92, சிவகுமாரன் கிருஷ்ணகுமாரன் யாழ் இந்து- நல்லூர்-89, புவனேந்திரன் ஈழநாதன் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன கரவெட்டி - 85

ஆண்டு 10

அருளம்பலம் டானியல் சுரேந்திரன்-யூனியன் கல்லூரி தெல்லிப்பழை - 93, ஆனந்தலிங்கம் சதீஸ் - யாழ் இந்து - நல்லூர் 92, குமாரசாமி யதுநந்தன் கொக்குவில் இந்து - நல்லூர் 84.

ஆண்டு 11

தங்கராஜா பிரதீபன் ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை -88, திருநாவுக்கரசு பாலமுருகன் பரியோவான்கல்லூரி - யாழ்ப்பாணம் -87, நடராஜா சந்திரகாசன் ஹாட்லிக் கல்லூரி - பருத்தித்துறை-82.

ஆண்டு 12/13

துரைராஜா பிரசாந்தன் யாழ் இந்து - நல்லூர் 88, சிவானந்தன் சசிகரன் யாழ். இந்து - நல்லூர் - 84, யோகராஜா சிவாகரன் -யாழ் இந்து நல்லூர் - 83.

கோட்டமட்டப் பரிசுகள் பெறுவோர் பட்டியல்;

நல்லூர் கோட்டம்:

ஆண்டு 6

பழனிமலைநாதன் கைலஜன் -யாழ். இந்து, சுந்தரமூர்த்தி மாறன் -யாழ். இந்து, பாலகிருஷ்ணன் கோகுலன் - யாழ். இந்து.

ஆண்டு 7

தேவராசா வாகீசன் -யாழ். இந்து, மகாலிங்கம் தயாகரன் - யாழ். இந்து, இரத்தினம் செந்தில்மாறன் -யாழ். இந்து.

ஆண்டு 8

தங்கராஜா மருதராஜன்-யாழ் இந்து, தேவராஜன் தயேந்திரா - யாழ். இந்து, நற்குணநாதன் ஐங்கரன் - யாழ். இந்து.

ஆண்டு 9

சிவகுருநாதன் செந்தூரன்-யாழ். இந்து. சண்முகநாதன் உஷாந்-யாழ். இந்து, நாகராஜா நேரு - யாழ். இந்து.

ஆண்டு 10

நடராசா நிமலராசா- யாழ் இந்து, நடேசன் சிவாசுதன் - யாழ். இந்து, முத்துலிங்கம் ஞானரூபன் - யாழ். இந்து.

ஆண்டு 11

கிருஷ்ணபிள்ளை குருபரன்-யாழ் இந்து, குணரட்ணம் செந்தீபன் - யாழ். இந்து, கருணேந்திரன் கருணராஜ் - கொக்குவில் இந்து.

ஆண்டு 12 / 13

சிவராஜசிங்கம் ஜெயகாந்த் -கொக்குவில் இந்து, பத்மநாதன் கஜன்-யாழ். இந்து, நடராஜா ஜெயகரன் - யாழ். இந்து, சிவானந்தன் சிவோதயன் - யாழ் இந்து.

ஊர்காவற்றுறை கோட்டம்:

ஆண்டு 8

யசோதா சபாநடேசன்-கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வி, நிர்மலாதேவி ஜேம்ஸ் - கரம்பன் சணமுகானந்தன் ம.வி.

ஆண்டு 9

தங்கவேல் சிவரூபன்-யாழ்ரன் கல்லூரி, டயானா எட்வேட் - கரம்பன் சண்முகானந்த ம. வி.

ஆண்டு 10

பிரதாயினி பத்மநாதன்-சண்முகானந்தா மகா வித்தி, யசோதா செல்வரத்தினம்-கலாநிதி ஆ. தியாகராசா ம, ம. வி, மரீனா ஜெனிற்றா அந்தோனிப்பிள்ளை - கரம்பன் சிறியபுஸ்ப மகளிர் ம. வி.

ஆண்டு 11

விமலரகுசா யோசவ்-கரம்பன் சண்முகானந்தா ம வி, மார்க்கண்டு சதீசன்-கரம்பன் சண்முகானந்தா ம. வி.

மருதங்கேணி கோட்டம்

ஆண்டு 6

அரியகுமார் ஸ்ரீகரன்- ஆழியவளை சி.சி.த.க.பா.

ஆண்டு 7

புஸ்பலிகியா கணபதிப்பிள்ளை - வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வி.

ஆண்டு 8

பஞ்சநாதன் விஜீதன் - மருதங்கேணி இ.த.க.பா, சிதம்திர அமிர்தலிங்கம் நாகர் கோவில் ம. வி.

ஆண்டு 10

வாரித்தம்பி கிருஷ்ணகரன், ஆழியவளை சி. சி. த. க. பா, ஜெயந்தினி உலகநாதன் மருதங்கேணி இ.த,க.பா, நவரத்தினம் சுகுமார்- ஆழியவளை சி.சி.த.க.பா.

ஆண்டு 11

கனகரத்தினம் ரமணன்-ஆழியவளை சி. சி த. க. பா, நாகேசுவரா அமுதகாசன்-ஆழியவளை சி. சி. த. க. பா, பசுபதி சிவானந்தன்- ஆழியவளை சி. சி. த.க,பா.

சங்கானைக் கோட்டம்

ஆண்டு-7

பாலசுப்பிரமணியம் ஜெயந்தன்-வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி, மாணிக்கசிங்கம் செந்தூரன்-வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி, கனகரத்தினம் இதயகுமார் - வட்டு. இந்து

ஆண்டு-8

ஸ்ரீபாலச்சந்திரன் ஸ்ரீசங்கர் வட்டு. திருஞானசம்பந்தர் வி. குணரத்தினம் புவனேசன்-சங்கானை சிவப்பிரகாச ம. வி. கனகரத்தினம் பிரசன்னா-சங்கானை சிவப்பிரகாசம் ம. வி.

ஆண்டு—9

தங்கராஜா பிரபாகரன்-சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, இராஜசிங்கம் பிரசாந்தன் - வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி, மகாலிங்கசிவம் செந்தில்ரூபன் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

ஆண்டு—10

நிவேதினி முத்துலிங்கம்-வட்டு. இந்துக் கல்லூரி, வீ. சிவாகரன் - வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி, சிவராசா பார்த்திபன் - மூளாய் சைவப்பிரகாச, வி.

ஆண்டு—11

நடராஜா போல் சதீஸ்-வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி, கோமதி ஜெயானந்த சர்மா-மூளாய் சைவப்பிரகாச வி. சிவசுப்பிரமணியம் செந்தூரன்-வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.

உடுவில் கோட்டம்:-

ஆண்டு-6

சோபிகா சிவராஜா - உடுவில் மகளிர் கல்லூரி, யசோதா முருகவேள் உடுவில் முருகமூர்த்தி வி. நவரத்தினம் ஜபோதீபன் உடுவில் முருகமூர்த்தி வி.

ஆண்டு—7

சுவர்ணா ஹரிச்சந்திரன் இராமநாதன் கல்லூரி

ஆண்டு-8

சரச்சந்திரன் ரவிசங்கர்-உடுவில் முருகமூர்த்தி வி. பிரதீபா பரமேஸ்வரன் உடுவில் மகளிர் கல்லூரி, யசோதா ஆனந்தராஜா உடுவில் மகளிர் கல்லூரி.

ஆண்டு-9

சந்திரலிங்கம் பராபரன் உடுவில் முருகமூர்த்தி வி. தர்சினி விஜயகுமார் இராமநாதன் கல்லூரி, ரேஜிதா சிவசுப்பிரமணியம் உடுவில் முருகமூர்த்தி வி.

ஆண்டு—10

சசிகலா இரட்ணசிங்கம் உடுவில் மகளிர் கல்லூரி.

ஆண்டு-11

பிருந்தா கெந்தீஸ்வரன் கந்தரோடை தமிழ் கந்தையா சோதிராசா சிறிகிருஷ்ணா இணுவில் மத்திய கல்லூரி. சந்திரகுமார் நிர்மலானந்தன் உடுவில் முருகமூர்த்தி வி.

ஆண்டு—12/13

சாந்தலிங்கம் செந்தில்குமார் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. (தொடரும்)

லேக்கவுஸின்

2-ம் பக்கத் தொடர்ச்சி

பிரயோகிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. -ம

தியாகி அன்னை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாவற்குழி லவனிதா குடியிருப்பு. யாழ். கன்னதிட்டி காளிகோவில் முன்றல், நீர்வேலி கந்தசாமி கோவிலடி, சித்தங்கேணி பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி கலங்காமப் பிள்ளையார் கோயில், மயிலணி முருகமூர்த்தி கோயில், மேலக்கைப் பிள்ளையார் கோவிலடி நவாலி வடக்கு.

ஆதாரம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வட்டத் தொடர்பாளர் தலைமையிலும் மாலை நிகழ்வாக ஆதாரம் விமர்சன அரங்கும் பொருண்மியப் பாடல்கள் பொருண்மியத் தொகுப்பு வீடியோ காட்சிகளும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. ரி

பலாலி

[1ம் பக்கத் தொடர்ச்சி

வர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், இதற்குப் புலிகளே காரணம் எனவும் முன்னர் இராணுவத்தினர் கூறி வந்தனர்.

எனினும் இச்சம்பவத்திற்கும் தமக்கும எதுவிதத் தொடர்பும் இல்லையெனக் கூறி இக்குற்றச்சாட்டை வன்மையாக மறுத்த புலிகள், அரசு மேற்கொண்டு வரும் பொய்ப் பிரசாரங்களில் இதுவும் ஒன்று எனவும் பலத்த கண்டனம் தெரிவித்திருந்தனர்.

தற்போது இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் பாதுகாப்பு அமைச்சு, இச்சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளா அல்லது மூன்றாவது சக்தியா அல்லது இராணுவத்தினரிடையே ஏற்பட்ட உள் முரண்பாடுகளா காரணம் என விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி

தொலைக்கல்வி அமர்வு

(யாழ்ப்பாணம்]

கோப்பாய் தொலைக்கல்வி நிலைய 93 / 95 பயிற்சியாளர்களையும் நிரந்தரப் போதனா சிரியர்களையும் எதிர்வரும் 20-ம் திகதி காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கற்கை அமர்வுக்குச் சமூகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார். சி

செயல்முறை வகுப்பு

]யாழ்ப்பாணம்]

மாணவர் அறிவியல் கழகத்தில் (கோண்டாவில்) இன்று திங்கள் பி. ப 3-00 யிலிருந்து 4-30 மணிவரை ஆண்டு 9க்கு கேத்திரகணித செயல் ஞறை வகுப்பும் பி.ப. 3-00 மணியில் இருந்து 4-30 மணி வரை ஆண்டு 10க்கு விஞ்ஞான செயல் முறை வகுப்பும் நடைபெறும்.

நாளை செவ்வாய் பி ப. 3-00 மணியிலிருந்து 4-30 மணிவரை ஆண்டு 10, 11க்கு கேத்திரகணித வினாவிடை செயல்முறை வகுப்பு நடைபெறும்.

நல்லின முந்திரிகை இன விருத்தி

[யாழ்ப்பாணம்]

நல்லின முந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்கு முகமாக இஸ்ரேல் புளு எனும் நல்லின முந்திரிகையை விருத்திசெய்யும் நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இதனடிப்படையில் ஒரு வருட காலத்திற்குள் பயன் தரக்கூடிய இவ் இனமரங்களை பொலித்தீன் பைகளில் நடுகை செய்து பராமரித்து மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை மேஜர் பிரதாப் செட்டிப் பண்ணையில் செய்யப்பட்டு வருகின்றது.

இராணுவ தளபதி

(1ம பக்கத் தொடர்ச்சி)

ரமைப்பு பணிகளை தற்போது ஜெரி டி சில்வாவே செய்து வருகிறார். இதை நிறுத்தினால் இராணுவ புனரமைப்பு பாதிப்படையும் என்றும் இதனால் இராணுவ முன்னெடுப்புக்கள் மிகவும் பாதிப்படையலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டு அவரது சேவையை மேலும் ஒரு வருடம் நீடிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதிக்கு சிபார்சு செய்திருந்தது-

இதையடுத்து ஜனாதிபதி சந்திரிகா ஜெரி டி சில்வாவின் பதவிக்காலத்தை மேலும் இரு வருடங்களுக்கு நீடித்துள்ளார். இவரது இந்த சேவை நீடிப்பானது மற்றொரு யுத்தத்தை அரசு எதிர்நோக்கியிருப்பதையே சுட்டிக்காட்டுவதாகவும் அவதானிகள் கூறியுள்ளனர். -சி

மேலும் 12 எம். பி.க்கள்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் தொகை 237ஆக அதிகரிக்கப்படவுள்ளது இதன்பிரகாரம் மேலும் 12 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். சி

அமைச்சர்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

முஸ்லிம்களை விடுவிப்பதும், வடபகுதிக்கான நல்லெண்ண விஜயமுமே இதன் நோக்கமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடபகுதிக்கான சமாதான யாத்திரையை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருவதற்கு, பௌத்த அமைப்புக்களும், வேறு பல அமைப்புக்களும் விருப்பம் தெரிவித்துள்ளன. சி

கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கக்கூடாது என்றும், அப்படி அவர்களை ஆயுதங்களுடன் நடமாட அரசு அனுமதி வழங்குமானால், அரசுக்கு வழங்கும் தமது ஆதரவை விலக்கி அரசாங்கத்தில் இருந்து விலகப்போவதாகவும் அமைச்சர் அஷ்ரப் கூறியுள்ளாராம்,

உண்மைக் காலமாக அமைச்சர் அஷ்ரப் தமது பலத்தைக் காட்டி அரசுக்குப் பல நிபந்தனைகளை போட்டு வருவதும் தெரிந்ததே. சி க

ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியலமைப்பு மாற்றங்கள் சமாதானப்பேச்சுக்கள், சமாதான முயற்சிகளுடன் தொடர்புபடுத்தப்படுமெனவும் இனப்பிரச்னைக்குரிய அரசு மேற்கொள்ளும் சமாதானத் தீர்வு இந்த அரசியலமைப்பில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதி ஆட்சி முறையை ஜூலை மாதத்திற்குள் அரசு ஒழிக்காதுவிடின், அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தப்போவதாகப் பல கட்சிகளும் அரசை எச்சரித்துள்ளதும் குறிபபிடத்தக்கது. சி

புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதி சந்திரிகா அனுப்பிய கடிதத்தில் வடபகுதி மீதான எரிபொருள் தடை. கடல் வலயத் தடைகளை நீக்கியுள்ளதாகவும் மற்றைய விடயங்கள் குறித்து மேமாதம் 5ம் திகதிக்கும் 10ம் திகதிக்குமிடையில் பேச்சுக்கள் நடத்தலாம் எனவும் குறிப்பிட்டிருந்தார்

எனினும் விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் வற்புறுத்தி வரும் போக்கவரதது பாதை திறப்பு, கிழக்கில் போராளிகள் நடமாட்டம் தொடர்பான விடயங்களில் இணக்கம் தெரிவிக்காது மழுப்பலாகவே ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

இக் கடிதம் தொடர்பான விடுதலைப் புலிகளின் பதிலையே அரசு எதிர்பார்த்திருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா தேசியத் தலைவருக்கு அனுப்பிய கடிதம் தற்போது புலிகளின் தலைமைப்பீடத்தினால் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. இக் கடிதத்தில் பூநகரி பாதை திறப்பது குறித்த விடயம் உட்பட வேறு விடயங்களிலும் அரசின் நிலைப்பாடு குறித்து விடுதலைப் புலிகள் மட்டத்தில் அதிருப்தி நிலவுவதாகப் புலிகள் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. -சி

பொருளாதார தடை நீக்கம்; படையினருக்கு அறிவுறுத்து?

பாதுகாப்பு அமைச்சு விடுத்தது

(கொழும்பு)

வடபகுதி மீதான பொருளாதாரத் தடை நீக்கத்தை உரியமுறையில் கடைப்பிடிக்குமாறு படையினருக்கு பாதுகரப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை பாதுகாப்பு அமைச்சின் செயலர் திரு. சந்திரானந்த டி சில்வா வடபகுதியில் சகல படை முகாம் அதிகாரிகளுக்கும் விடுத்துள்ளார்.

பொருளாதார தடைநீக்க அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் விதி முறைகளை, உரியமுறையில் கடைப்பிடிக்குமாறும் திரு. சந்திரானந்த டி சில்வா அறிவுறுத்தியுள்ளார்.

எனினும் நேற்றுமுன்தினம் மாலை வரை இது தொடர்பான செயற்பாட்டு பணிப்புரைகள் எதுவும் வவனியாவிலுள்ள படை அதிகாரிகளுக்கு வந்து சேரவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினமும் வவுனியாவில் படையினர் தமது வழமையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

இ. தொ. கா.வுக்குள் பிளவு ஏற்படுத்த முயற்சி

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் பிளவு ஏற்படுத்தும் நோக்கில், ஒரு பகுதி உறுப்பினர்கள் செயற்பட்டு வருகின்றனர் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் பி. பி. சி. சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது: இதற்கான சூழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த உறுப்பினர்கள், வேறு பிரிவினருடன் சேர்ந்து வேலை நிறுத்தத்தில் இறங்கவுள்ளார்கள். அதன் மூலம் தொழிலாளர் காங்கிரஸுக்குள் பெரும் பிளவை ஏற்படுத்த அவர்கள் முயன்று வருகின்றார்கள் என்றார். ம சி

வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு ஐ.ஐ.தே.மு.வும் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்பை தாங்கள் எதிர்ப்பதாக அமைச்சர் ஸ்ரீமானி சலேமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித பிரிவு) அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடர்பாக தங்களுடன் கலந்தாலோசிக்காததால் இக்கட்சி வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

தமது இந்தஎதிர்ப்பை அவர்கள் பகிரங்கமாகவே அறிவித்துள்ளனர். இதனால் பொ. ச. மு தனது கூட்டணிக்குள்ளேயே பல நெருக்கடிகளை எதிர்நோக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பொ. ச. மு. வில் அங்கம் வகிக்கும் முக்கிய அமைச்சர் ஒருவரிடம் மேற்படி கட்சி முக்கியஸ்தர்கள் தமது முடிவைத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு மக்கள் ஐக்கிய முன்னணியும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (சி)

வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்ல பதிய வேண்டும்

(கொழும்பு)

வேலை வழங்கும் நாடுகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம், பதிவுசெய்யாத எவரும் வெளிநாட்டு வேலைக்கு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்தோர் மாத்திரமே இலங்கையருக்கு வேலை வழங்கும் நாடுகளுக்கு தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்ல முடியும். அவ்வாறு தமது பெயர்களை பதியாதோர் மேற்படி நாடுகளில் வேலை வாய்ப்புகள் பெறமுடியாது.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுச்செல்வோரிடம் அரசு குறிப்பிட்ட தொகைப் பணத்தை அறவிட்டு வருகிறது ஆனால் இவ்வாறு பணம் செலுத்தாமல் பலர் வெளிநாடுகளுக்கு சென்றதைப்படுத்தே அரசு மேற்படி பதிவு முறையை அமுல்படுத்தியுள்ளது. சி

★ வடக்கு–கிழக்கில்

11 வருட கால யுத்தத்திற்காக 27,500 கோடி ரூபா செலவு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் கடந்த பதினொரு வருடமாக இடம் பெற்ற யுத்தம் காரணமாக 27,500 கோடி ரூபாவுக்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கில் இந்த யுத்தத்தினால் அரசின் பொருளாதாரமே தேய்வடைந்து விட்டது. யுத்தத்திற்காக கடந்த பல வருடங்களாக ஒவ்வொரு வருடமும் சுமார் 2,500 கோடி ரூபாவரை செலவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பாதுகாப்பு செலவு அதிகரிக்கப்பட்டு வந்ததே தவிர அரசால் பாதுகாப்புச் செலவை குறைக்கவோ, இந்த யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவோ முடியவில்லை. யுத்தத்திற்கு செலவிடப்பட்ட பணத்தில் அரைவாசியையாவது பொருளாதார அபிவிருத்திக்கு செலவிட்டிருந்தால் இன்று நாடு எவ்வளவோ தூரம் முன்னேறியிருக்குமென்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். சி

கவச வாகனம் கவிழ்ந்து 4 படையினர் காயம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் பொலிஸ் அதிரடிப்படையினர் பிரயாணம் செய்த பள்ளி கவச வாகனம் சடம்புரண்டதில் அதில் பயணம் செய்த 4 அதிரடிப்படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

பொலிசார் நன்கு மது அருந்திவிட்டு ரூடேன் குளம் என்ற இராணுவ முகாமிலிருந்து பாவட்ட என்ற இடத்திற்கு வந்த போதே இவ் அனர்த்தம்ஏற்பட்டுள்ளதாம்.

இச்சம்பவத்தையடுத்து பொலிஸ அதிரடிப்படையினர் அப்பகுதியால் வந்த மாடுகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுச் சென்றனராம். (க-சி)

விடுமுறைகளைக் குறைக்க அரசு திட்டம்

(கொழும்பு)

அரச, வர்த்தக விடுமுறைகளை குறைக்க அரசு திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அரசு உபகுழுஒன்றை அமைத்துள்ளது.

வெளிநாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் அரச, வர்த்தக விடுமுறைகள் அதிகளவில் இருப்பதால் தொழில் துறைகளில் பெரும்பாதிப்பு ஏற்படுவதாக பொருளாதார நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. சி

கிளிநொச்சியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீசுவதைப் போல் குத்திப் பதிந்து மேல்எழும்பி பின்மீண்டும் தாழப் பதிந்ததால் இப் பகுதி மக்கள் பெரும் மனக் கிலேசம் அடைந்தனர்.

கோவில் ஒன்றில் பூங்காவனத்திற்கு சென்ற பக்தர் கூட்டமும் விமானத்தின்செயற்பாட்டைக்கண்டு நாலா புறமும் சிதறி ஓடியது. ஆண்கள், பெண்கள் குழந்தைகள் உட்பட பலரும் பதற்றத்துடன் ஓடி பாதுகாப்பிடம் தேடினர்.

சிலதினங்களுக்குமுன் ஹெலிகொப்டர் ஒன்று இப்பகுதியை சுற்றி வட்டமிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. க-சி

இலங்கை பெண்கள் லெபனானில் பாதிப்பு

(கொழும்பு)

லெபனானுக்கு பணிப்பெண்களாகச் செல்லும் இலங்கைப் பெண்கள் பல பாதிப்புக்களுக்குள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

'மாபியா' போன்ற சட்ட விரோத பாதாள உலகு கும்பல்களினால் இப்பணிப் பெண்கள் பெரும்பாதிப்புக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

அண்மையில லெபனானுக்கு விஜயம் செய்த தொழில அமைச்சர் திரு. மகிந்த ராஜபக்ஷ அங்கு இலங்கைப் பணிப பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களை நேரில கேட்டறிந்து கொண்டார்.

இதையடுத்து இளம் பெண்களை லெபனான போன்ற நாடுகளுக்கு அனுப்புவதில்லை என தீர்மானித்ததும் குறிப்பிடத்தக்கது. சி

வர்ணமூட்டிய கண்ணாடிகளை வாகனங்களில் பொருத்தக்கூடாது

(கொழும்பு)

வர்ணமூட்டப்பட்ட கண்ணாடிகளை பொருத்தியுள்ள வாகனங்களுக்கு எதிராக போக்குவரத்து பொலிஸார் மே 1-ம் திகதி முதல் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்

கொழும்பில் சட்ட விரோத செயல்கள், கொலை, கொள்ளைச் சம்பவங்களுக்கு வர்ணமூட்டப்பட்ட கண்ணாடி பொருத்திய வாகனங்கள் பயன்படுத்தப்படுவதால் இவ்வாறு வர்ணமூட்டப்பட்ட கண்ணாடி பொருத்திய வாகனங்களை பயன்படுத்த வேண்டாமென பொலிஸார் கடந்த ஜனவரி மாதம் எச்சரித்திருந்தனர்.

அமைச்சர்களும், முக்கிய பிரமுகர்களும். அரசியல்வாதிகளும் மட்டுமே இவ்வாறான வாகனங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவே ஏனையவர்கள் உடனடியாக இவ்வாறான கண்ணாடிகளை தமதுவாகனங்களிலிருந்து அகற்றுமாறும் பொலிசார் எச்சரித்துள்ளனர், -சி

வடபகுதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்:

அவர் மேலும் தெரிவிக்கையில்; விடுதலைப்புலிகள் குண்டுகள் தயாரிக்கின்றார்கள் என்ற காரணத்துக்காக யூரியாவை தடைசெய்திருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமல்ல.

வட அயர்லாந்துக் கெரில்லாக்கள் குண்டுகள் தயாரிப்பதற்கு யூரியாவை பாவிக்கின்றார்கள் என்று பிரித்தானிய அரசாங்கத்துக்கு தெரியவந்ததும் வட அயர்லாந்து மக்களுக்குத் தேவையான யூரியாவைப் பிரிட்டன் தடைசெய்யவில்லை. ஆனபடியால் வட அயர்லாந்து மாதிரி வடகுதிக்கும் யூரியாவை அனுப்பலாம்.

இது நடைமுறைப்படுத்தாதபடியால் யாழ்ப்பாணமக்களின் வாழ்க்கை மிகவும் கஷ்டமான ஒரு சூழ்நிலைக்கு வந்துள்ளது.

வடஅயர்லாந்தில் பிரித்தானிய அரசாங்கம் அங்கு நிறுத்தப்பட்டிருந்த படைகளை வாபஸ்பெற்றுள்ளது. பாதைகளில் சோதனை செய்வதை நிறுத்தியுள்ளார்கள். பிரித்தானிய அரசாங்கம் இப்படிச் செய்ததால் இலங்கை அரசாங்கமும் இந்த முறையைப் பரிசீலிக்கலாம்'' என்றார்.

(ம-சி)

அன்னை பூபதி நினைவு அனுஷ்டிக்கப்படுகிறது

(அரியாலை)

தியாகச்சுடர் அன்னை பூபதியின் 7-ம் ஆண்டு நினைவு அஞ்சலி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

யாழ். புகையிரத நிலையத்தில் தங்கியிருக்கும் தீவக மக்களின் ஸ்ரீபன் குடியிருப்பிலுள்ள மகளிர் மன்ற யாழ்.புகையிரத நிலைய முன்றலிலும் யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நிலைய முன்றலிலும் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலகங்கள் ஆகியவற்றின் முன்றலிலும் அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டு மலர், தீப அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

யாழ். மத்திய பஸ்நிலையம், யாழ். அர்ச்சுனா வீதி ஆகியன சிவம்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன; 59 சி

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Lieence number B/1633613,